# சிவகங்கை நகராட்சி

## சிறப்புக் கூட்டம்

2023ம் ஆண்டு மே மாதம் 23 ம் நாள் சுபகிருது வருடம் வைகாசி 09ம் நாள் செவ்வாய் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் சிறப்புக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் கீழ்கண்ட பொருள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். உறுப்பினர்கள் அனைவரும் வருகை தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
சிவகங்கை நகராட்சி

## நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் சிறப்புத் தீர்மானம்

சிவகங்கை நகரமானது தொன்மை வாய்ந்த மற்றும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரமாகும். இந்நகரைச் சுற்றி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொண்டி, காளையார் கோயில், மானாமதுரை மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் மிக்க கீழடி போன்ற இடங்கள் உள்ளன. இவைகள் அனைத்தும் இம்மாவட்ட எல்லைக்குள்ளேயே அமைந்துள்ளது. இதனால் இந்நகருக்கு அனைத்து மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களிலும் இருந்தும் சுற்றுலா பயணிகள் அதிகமாக வந்து செல்கிறார்கள். இதனால் பொது போக்குவரத்தும் அதிக அளவில் உள்ளது. இந்நகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 60,000க்கும் மேல் உள்ளது. அரசாணை (நிலை) எண்:57 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்:02.05.2023ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இந்நகராட்சி ஆண்டு வருவாய் ரூ.9.94 கோடி ஆகும். தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தும் தகுதியை பெற்றுள்ளது. மேலும் இந்நகர் பல வராலாற்று சிறப்புகளை கொண்டுள்ளதால், விரைவான வளர்ச்சியினை அடைந்து வருகிறது. மேலும் இந்நகர் நீண்ட காலத்திற்கு முன்பே மாவட்ட தலைநகரமாக அறிவிக்கப்பட்டு துரித வளர்ச்சியடைந்து வருகிறது. எனவே வரலாற்றுச் சிறப்பினை உள்ளடக்கிய சிவகங்கை மாவட்ட தலைமையிடமான சிவகங்கை நகராட்சியினை, தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தினால் இம்மாவட்டத்தில் உள்ள தொன்மை வாய்ந்த பகுதிகள் யாவும் சிறந்த முக்கியத்துவம் பெறும். எனவே சிவகங்கை நகராட்சியினை தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை பிறப்பிக்க அரசினை இம்மன்றத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளலாம்.

**தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**
**மன்றத் தீர்மான எண்:51**

நகர்மன்றத் தலைவர்
சிவகங்கை நகராட்சி